<u>**சுருக்கம்**</u>

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் – அமைப்புசாரா தொழிலாளர்களிடமிருந்து ஆதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பற்றிய விவரங்களை பெறுவதற்கு அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>**தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (ஜ1) துறை**</u>

**அரசாணை (நிலை) எண். 47** **நாள். 28.03.2012**

**படிக்க :-**

1 தொழிலாளர் ஆணையர், சென்னை–6 அவர்களின் கடிதம் எண். W1/9285/2011, நாள். 23.02.2011.

2 தொழிலாளர் ஆணையர், சென்னை–6 அவர்களின் கடிதம் எண். W1/9285/2011, நாள். 19.05.2011 மற்றும் 27.06.2011.

-----

<u>**ஆணை**</u> :

வரவு செலவு திட்டத்தில், பொது நிதி ஒதுக்கீடு தவிர ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின் கீழும் (Special Component Plan for Scheduled Castes- SCSP), பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழும், (Tripal Area Sub- Plan- TSP) அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களுக்கு அரசு மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுமையான அவ்வின மக்களுக்கே செலவிடப்பட வேண்டும்.

2. மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டம், 1982 மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள நலத்திட்டங்களின் பிரிவுகளின் கீழ் நல வாரியங்களில் தொழிலாளர்கள் பதிவின் போது சாதி அடிப்படையில் தொழிலாளர்களை வகைப்படுத்தும் பிரிவு ஏதும் பதிவு விண்ணப்பத்தில் தற்போது இல்லை என்பதால், நல வாரியங்களில் பதிவு செய்துள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரை கண்டறிய ஏதுவாக தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம், 2006 மற்றும் இதர 14 நலத் திட்டங்களுக்கு உரிய திருத்தம் வெளியிடப்பட வேண்டும் என்று தொழிலாளர் ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கவனமான பரிசீலனைக்குப் பின்னர், வரவு செலவுத் திட்டத்தில் ஆதிதிராவிடர் துணைத் திட்டம் (Special Component Plan for Scheduled Castes- SCSP) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களின் கீழ், (Tripal Area Sub- Plan- TSP) ஒதுக்கப்படும் நிதியினை முழுமையாக அவ்வின மக்களுக்கே செலவு செய்திட ஏதுவாக அமைப்புசாரா தொழிலாளர்களிடமிருந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பற்றிய விவரங்களை பெற அனுமதி அளித்து அரசு ஆணையிடுகின்றது.

த.பி.பா.

4. அமைப்புசாரா தொழிலாளர்களிடமிருந்து சாதி பற்றிய விவரங்களை பெறும்போது கீழ்க்கண்ட நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

அ) அரசாணை (நிலை) எண். 123, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள். 24.10.2008–ன்படி, புதிய உறுப்பினர்களின் பதிவு விண்ணப்பங்களை கிராம நிர்வாக அலுவலரின் சரிபார்த்தலுக்கு அனுப்பும்பொழுதே சாதி பற்றிய விவரங்களையும் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

ஆ) ஏற்கனவே பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் தொழிலாளர் அலுவலரிடம் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பதிவு புதுப்பித்தலின் போதோ அல்லது கேட்பு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போதோ சாதி பற்றிய விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும். அவ்விவரங்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் சரிபார்க்கப்பட வேண்டும்.

இ) தொழிலாளர்களால் உரிய வருவாய்த் துறை அலுவலரிடமிருந்து (ஆதி திராவிடர் வட்டாட்சியரிடமிருந்தும், பழங்குடியினர் கோட்டாட்சியரிடமிருந்தும்) பெறப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட சாதி சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளலாம். இவ்வாறு பெறப்படும் சான்றிதழ்களுக்கு கிராம நிர்வாக அலுவலரின் சரிபார்த்தல் தேவையில்லை.

ஈ) மேற்கூறிய விவரங்களை ஒரே ஒருமுறை சரிபார்த்தல் போதுமானது, இதர தகுதிகள் பெற்றவர் எனில், அதே பயனாளியிடமிருந்து பெறப்படும் விவரங்களை மீள சரிபார்க்க தேவையில்லை.

5. மாதாந்திர அறிக்கை சமர்ப்பிக்கும் போது ஆதிதிராவிடர் துணைத் திட்டம் (SCSP) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத் (TSP) தலைப்பு கணக்குகளின் கீழ் செலவிடப்பட்ட தொகையினையும் சேர்த்து அனுப்பிவைக்குமாறு தொழிலாளர் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. மேலும், நலத்திட்டப் படிவங்களுக்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்ள தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டம், 1982–ன் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்று கருத்துருவினைஅனுப்புமாறு தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மோகன் பியாரெ,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழிலாளர் ஆணையர், சென்னை– 600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை– 600 034.

செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு ஓவியர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு விசைத்தறி நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு பாதையோர வியாபாரிகள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை– 600 102.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை– 600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை– 600 009.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை– 600 005.
மாநில கணக்காயர், சென்னை– 600 018/35.

**<u>நகல்</u>**

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
நிதித்துறை, சென்னை– 600 009.
வருவாய்த்துறை, சென்னை– 600 009.
மாண்புமிகு முதலைமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை – 600 009
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்